दक्षिण रेलवे / Southern Railway
राजभाषा संगठन / Rajbhasha Organisation
मुख्यालय / Headquarters Office



கல்கி கிருஷ்ணமூர்த்தி
कल्कि कृष्णमूर्ति
Kalki Krishnamurthy



முன்ஷி பிரேம்சந்த்
मुंशी प्रेमचन्द
Munshi Premchand

# तमिल - हिंदी साथ-साथ

## सहायक साहित्य/HELP LITERATURE :91

18.03.2024
क्षेत्रीय राजभाषा कार्यान्वयन समिति की बैठक में विमोचित

# உபன்யாஸ் சாம்ராட் முன்ஷி பிரேம்சந்த்

தன்பத் ராய் ஸ்ரீவாஸ்தவா (31 ஜூலை 1880 - 08 அக்டோபர் 1936), முன்ஷி பிரேம்சந்த் என்ற பெயரில் மிகவும் பிரபலமாகி நாமனைவருக்கும் அறிமுகமானவர். இது அவரது புனைப்பெயராகும். இந்தி இலக்கியத்தின் மிகவும் புகழ் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான இவர் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தி இலக்கிய உலகின் தூண்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் ஆவார். அவரது படைப்புகளில் கோதான்(Godaan), கர்மபூமி, கபன்(Gaban- Misappropriation,Embezzlement), மான்சரோவர், ஈத் கா த்யோஹார்(Eid ka tyohar) ஆகியவை குறிப்பிடத் தகுந்தவை.



இவர் 1907 ஆம் ஆண்டில் *Soz-e Watan* என்ற புத்தகத்தில் ஐந்து உருது சிறுகதைகளின் முதல் தொகுப்பை வெளியிட்டார். தேசபக்தி ததும்பிய இந்த புத்தகத்தை ஆங்கிலேய ஆட்சி முற்றிலும் தடை செய்து அனைத்து படைப்புகளையும் கைப்பற்றியது. அது மட்டுமன்றி நவாப் ராய் என்ற படைப்பாளி இனிமேல் எழுதவே கூடாது என்றும் தடை விதித்தது. இதனால் "நவாப் ராய்" என்ற பெயரில் முதலில் எழுத தொடங்கிய அவர் "பிரேம்சந்த்" என்ற பெயரில் எழுத ஆரம்பித்தார்,

முன்ஷி ஒரு நாவலாசிரியர், கதாசிரியர் மற்றும் நாடக ஆசிரியர், அவர் "உபன்யாஸ் சாம்ராட்" ("நாவலாசிரியர்களின் பேரரசர்") என்று குறிப்பிடப்படுகிறார். இவரது படைப்புகளில் ஒரு டஜன் புதினங்கள், சுமார் 300 சிறுகதைகள், பல கட்டுரைகள் மற்றும் பல வெளிநாட்டு இலக்கிய படைப்புகளின் மொழிபெயர்ப்புகள் அடங்கும்.

தன்பத் ராய் ஸ்ரீவாஸ்தவா 31 ஜூலை 1880 அன்று வாரணாசி (பனாரஸ்) அருகே அமைந்துள்ள லம்ஹி என்ற கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை அஜாயப் ராய் ஒரு தபால் நிலைய எழுத்தராக இருந்தார். அவரது தாயார் ஆனந்தி தேவி ஆவார். இவரது தாயாரே, இவரது **படே கர் கி பேட்டி** படத்தில் ஆனந்தி என்ற கதாபாத்திரத்திற்கு உத்வேகம் அளித்தவர். இவர் அஜாயப் ராய் மற்றும் ஆனந்தியின் நான்காவது குழந்தை.

7 வயதாக இருந்தபோது, தன்பத் ராய் லம்ஹிக்கு அருகில் அமைந்துள்ள லால்பூரில் உள்ள ஒரு மதரஸாவில் தனது கல்வியைத் தொடங்கினார். மதரஸாவில் ஒரு மௌல்வியிடமிருந்து உருது மற்றும் பாரசீக மொழியைக் கற்றுக்கொண்டார். 8 வயதாக இருந்தபோது, தனது தாயை இழந்தார்.

குழந்தையாக இருந்தபோது, தன்பத் ராய் கற்பனை கதைகளில் ஆர்வம் காட்டினார். பாரசீக மொழி கற்பனைக் காவியமான *Tilism-e-Hoshruba* கதைகளை

ஒரு கடையில் கேட்டார். பின்னர், புத்தக மொத்த விற்பனையாளருக்கு புத்தகங்களை விற்கும் வேலை செய்ய ஆரம்பித்தார். இதனால் நிறைய புத்தகங்களைப் படிக்க வாய்ப்பு கிடைத்தது. அவர் ஒரு மிஷனரி பள்ளியில் ஆங்கிலம் கற்றார், ஜார்ஜ் டபிள்யூ. எம். ரெனால்ட்ஸ் எழுதிய எட்டு தொகுதிகள் கொண்ட தி மிஸ்டரீஸ் ஆஃப் தி கோர்ட் ஆஃப் லண்டன் உட்பட பல புனைகதைப் படைப்புகளைப் படித்தார். அவர் தனது முதல் இலக்கியப் படைப்பை கோரக்பூரில் இயற்றினார், ஆனால் அது வெளியிடப் படவேயில்லை. அது தற்போது தொலைந்தும் விட்டதாகக் கருதப் படுகிறது.

1895ஆம் ஆண்டில் ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் போது, தனது 15 வயதில் திருமணம் செய்து கொண்டார். 1897ல் தந்தையை இழந்தார். அதன் பின்னர் பிரேம்சந்த் பனாரஸில் ஐந்து ரூபாய் மாத சம்பளத்தில் ஒரு வழக்கறிஞரின் மகனுக்கு பயிற்சி அளிக்கும் வேலையைப் பெற்றார். அவர் வழக்கறிஞர் வீட்டுத் தொழுவத்தில் ஒரு மண் குடிசையில் வசித்து வந்தார். 1900ஆம் ஆண்டில், பிரேம்சந்த் 20 ரூபாய் மாத சம்பளத்தில் ஒரு அரசு மாவட்ட பள்ளியில் உதவி ஆசிரியராக சேர்ந்தார்.

"நவாப் ராய்" என்ற புனைப்பெயரில் அவரது முதல் சிறு நாவல் **அஸ்ரார்-ஏ-மஆபித்(உருது)** ஆகும். பனாரஸிலிருந்து வெளியான உருது வார இதழான ஆவாஸ்-இ-கல்கில் இந்த நாவல் வெளியிடப்பட்டது.

தேசியவாத செயல்பாட்டால் ஈர்க்கப்பட்ட பிரேம்சந்த், இந்திய தேசிய காங்கிரஸ் தலைவரான கோபால கிருஷ்ண கோகலே குறித்த ஒரு கட்டுரையை ஜமானாவில் வெளியிட்டார்.

1907ல் வெளியிடப்பட்ட பிரேம்சந்தின் இரண்டாவது உருது குறு நாவலான ஹம்குர்மா-வ-ஹம்சவாப் (இந்தியில் பிரேமா), "பாபு நவாப் ராய் பனார்சி" என்ற பெயரில் எழுதப்பட்டது. சமகால பழமை வாத சமுதாயத்தில் விதவை மறுமணம் தொடர்பான பிரச்சினையை இது ஆராய்கிறது. 1907ஆம் ஆண்டில், பிரேம்சந்தின் மற்றொரு சிறு நாவலான கிஷ்னாவை பனாரஸின் மெடிக்கல் ஹால் பிரஸ் வெளியிட்டது. ஏப்ரல்-ஆகஸ்ட் 1907ல், பிரேம்சந்தின் கதை 'ரூடீ ராணி'(Rudhi Rani) ஜமானாவில் தொடர் வடிவத்தில் வெளியிடப்பட்டது.

1914 ஆம் ஆண்டிலிருந்து இவர் முன்ஷி பிரேம்சந்த் என்ற பெயரில் இந்தியில் எழுதத் தொடங்கினார். அவரது முதல் இந்தி கதை சௌத்(*Saut*) டிசம்பர் 1915ல் சரஸ்வதி இதழில் வெளியிடப்பட்டது, மேலும் அவரது முதல் சிறுகதைத் தொகுப்பு சப்த சரோஜ்(Sapta Saroj) ஜூன் 1917 இல் வெளியானது.

ஆகஸ்ட் 1916 இல், பிரேம்சந்த் பதவி உயர்வில் கோரக்பூருக்கு மாற்றப்பட்டார். கோரக்பூரின் உயர்நிலைப்பள்ளியில் துணை தலைமை ஆசிரியர் ஆனார். கோரக்பூரில், அவர் புத்தக விற்பனையாளர் புத்த லால் உடன் நட்பை வளர்த்துக் கொண்டார், பள்ளியில் தேர்வு புத்தகங்களை விற்பனை செய்வதற்கு ஈடாக, வாசிப்புக்காக நாவல்களை படிக்க வாங்க அனுமதி பெற்றார். இதன் மூலம்

பிரேம்சந்த் பிற மொழிகளின் சிறந்த படைப்புகளை ஆர்வத்துடன் படிக்கலானார். மேலும் இந்த படைப்புகளில் பலவற்றை இந்தியிலும் மொழிபெயர்த்தார்.

1919 வாக்கில், பிரேம்சந்த் தலா நூறு பக்கங்களைக் கொண்ட நான்கு நாவல்களை வெளியிட்டார்.1919 ஆம் ஆண்டில், பிரேம்சந்தின் முதல் பெரிய நாவலான சேவா சதன்(Seva Sadan)இந்தியில் வெளியிடப்பட்டது. இந்த நாவல் முதலில் உருது மொழியில் பஜார்-இ-ஹுஸ்ன்(Bazaar-e-Husn) என்ற தலைப்பில் எழுதப்பட்டது, இந்தியில் இதனை கல்கத்தாவைச் சேர்ந்த வெளியீட்டாளர் ஒருவர் வெளியிட்டார்.

பிரேம்சந்த் அலகாபாத்திலிருந்து 1919 ஆம் ஆண்டில் பி.ஏ பட்டம் பெற்றார். 1921 வாக்கில், அவர் பள்ளிகளின் துணை ஆய்வாளராக பதவி உயர்வு பெற்றார். பிப்ரவரி 8, 1921 அன்று, கோரக்பூரில் நடந்த ஒரு கூட்டத்தில் அவர் கலந்து கொண்ட போது ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக மகாத்மா காந்தி மக்களிடம் அரசாங்க வேலைகளை ராஜினாமா செய்யும்படி கூறினார். பிரேம்சந்த், இரண்டு குழந்தைகள் மற்றும் ஒரு கர்ப்பிணி மனைவி என்ற நிலையிலும் தனது அரசு வேலையை ராஜினாமா செய்தார். வேலையை விட்டு விலகிய பின்னர், பிரேம்சந்த் கோரக்பூரிலிருந்து பனாரஸுக்கு சென்று தனது இலக்கிய வாழ்க்கையில் கவனம் செலுத்த முடிவு செய்தார். ஆனால் 1936ல் இறக்கும் வரை, அவர் கடுமையான நிதி சிக்கல்களை எதிர்கொண்டார். நீண்டகால உடல்நல கேட்டையும் அனுபவித்தார்.

1923 ஆம் ஆண்டில், பனாரஸில் ஒரு அச்சகம் மற்றும் பதிப்பகத்தை நிறுவி "சரஸ்வதி பிரஸ்" என்று பெயர் சூட்டினார். 1924ல் பிரேம்சந்தின் ரங்பூமி(Rang Bhoomi) வெளியானது, 1928 ஆம் ஆண்டில் நடுத்தர வர்க்கத்தின் பேராசையை மையமாகக் கொண்ட நாவல் கபன் (Gaban-"மோசடி"), வெளியானது.

இந்தி திரையுலகில் தனது அதிர்ஷ்டத்தை முயற்சிக்க பிரேம்சந்த் 31 மே 1934 அன்று பம்பாய்க்கு வந்தார். தயாரிப்பு நிறுவனமான அஜந்தா சினிடோனுக்கு கதை எழுதும் வேலையை ஏற்றுக் கொண்டார், ஆண்டுக்கு 8000 சம்பளம் பெற்றார். பல காரணங்களால் அலகாபாத் திரும்பினார்.

## கடைசி காலகட்டம்


1936 இல் லக்னோவில் முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் முதல் தலைவராக பிரேம்சந்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரேம்சந்தின் கடைசி யாக முடிக்கப்பட்ட படைப்பான கோதான் (1936) அவரது சிறந்த புதினமாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் படுகிறது, இது ஒரு ஆகச் சிறந்த இந்தி புதினம் ஆகும். இதே ஆண்டில், பிரேம்சந்த் கஃபன் (Kafan) சிறுகதையினை வெளியிட்டார், தனது இறந்த மனைவியின் இறுதி சடங்குகளுக்காக பணம் சேகரிக்கும் ஒரு ஏழை அதை உணவு மற்றும் மதுவிற்காக செலவிடும் அவலத்தை விளக்கும் இந்த கதையில் மதுவினால் சீரழியும் சமுதாயத்தின் நிலை வெளிப்படுகிறது. இந்த அவலம் இன்னும் தொடர்வது தான் வேதனைக்குரிய நிலையாகும். கடைசியாக

வெளியிடப்பட்ட பிரேம்சந்தின் கதை *Cricket Match*, இது அவரது மரணத்திற்குப் பிறகு ஜமானாவில் வெளியானது.


பிரேம்சந்தின் படைப்புகள் இயல்பியலை மையமாகக் கொண்டிருந்தன. அவரது புதினங்கள் ஏழை மற்றும் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் பிரச்சினைகளை விவரிக்கின்றன. அவரது படைப்புகள் பகுத்தறிவு கண்ணோட்டம் கொண்டவை. தேசிய மற்றும் சமூக பிரச்சினைகள் குறித்த பொது விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில் படைக்கப்பட்டவை அவரது இலக்கியப் பொக்கிஷங்கள். ஊழல், குழந்தைத் திருமணம், விதவை மறுமணம், விபச்சாரம், நிலப்பிரபுத்துவ அமைப்பு, வறுமை, காலனித்துவம் மற்றும் இந்திய சுதந்திர இயக்கம் ஆகியவற்றைப் பற்றியும் ஆகச் சிறந்த படைப்புக்களை இலக்கிய உலகிற்கு வழங்கிய மிகச் சிறந்த படைப்பிலக்கியவாதியான அவருக்கு இந்த இதழ் ஒரு அர்ப்பணிப்பாகும்.

**படைப்புகள்**

தேவஸ்தான ரகசியம்(देवस्थान रहस्य),பிரேமா(प्रेमा), கிஷ்னா(किश्ना), ரூடி ராணி(रूढ़ी रानी),வர்தான்(वरदान),ஸேவா ஸதன்(सेवा सदन), ப்ரேமாஶ்ரம்(प्रेमाश्रम), ரங்கபூமி(रंगभूमि), நிர்மலா(निर्मला), காயாகல்ப்(कायाकल्प), ப்ரதிக்யா(प्रतिज्ञा), கபன்(गबन), கர்மபூமி(कर्मभूमि), கோதான்(गोदान), மங்கல்சூத்ர(मंगलसूत्र)



## उपन्यास सम्राट "कल्कि" कृष्णमूर्ति



**कल्कि** (9 सितंबर, 1899 - 5 दिसंबर, 1954) एक प्रसिद्ध तमिल लेखक थे। उनका वास्तविक नाम रा.कृष्णमूर्ति था। कल्कि, बीसवीं सदी के तमिल लेखकों के सम्राट थे। तमिल में ऐतिहासिक कहानियों के अग्रदूत थे। उनका जन्म 9 सितंबर, 1899 को तंजाऊर जिले के मयिलाडुतुरै के पास पुत्तमंगलम में हुआ था। पिता रामसामी अय्यर और माता तैयल नायगी थीं। पुत्तमंगलम में अपनी प्राथमिक शिक्षा पूरी करने के बाद उन्होंने तिरुच्चि ईआर हाई स्कूल और नेशनल कॉलेज में अपनी पढ़ाई जारी रखी। 1921 में, गांधीजी ने असहयोग आंदोलन शुरू किया। देश के स्वतंत्रता संग्राम में भाग लेने की इच्छा से कल्कि ने स्कूल छोड़ दिया और करूर में नामक्कल कवि की अध्यक्षता में एक बैठक में अंग्रेज़ सरकार के प्रतिबंधों के खिलाफ आवाज उठाई। पुलिस ने उसे गिरफ्तार कर लिया और 3 महीने के कठोर कारावास की सजा सुनाई।

रिहाई के बाद उन्होंने तिरुच्चि में तमिलनाडु कांग्रेस पार्टी के कार्यालय में एक क्लर्क के रूप में काम किया। उस समय कांग्रेस के लिए लिखे गए पैम्फलेट में उनकी लेखन प्रतिभा का प्रदर्शन हुआ। कल्कि की प्रतिभा को पहचानते हुए तिरुच्चि के कांग्रेस नेता डॉ. डी.एस.एस. राजन ने तिरु वी.कल्याणसुंदरनार की नवशक्ति में शामिल होने की सलाह दी और उन्हें अनुशंसा पत्र दिया। कल्कि की सरल और मीठी तमिल शैली ने तिरु.वी.क को आकर्षित किया और उन्हें तुरंत सह संपादक के रूप में तैनात किया। नवशक्ति में काम करते हुए, कल्कि 'तमिल तेनी(मधुमक्खी)' के नाम से विश्व समाचारों पर लेख लिखा करते थे जिसने उनकी लेखन प्रतिभा को और भी समृद्ध बनाया। वे नवशक्ति के विशेष संवाददाता के रूप में प्रमुख सम्मेलनों में जाते थे और कार्यक्रमों की जानकारी देते थे। इन सभी की बड़ी तारीफ की गई। इसी समय कल्कि की शादी हुई थी। पत्नी का नाम रुक्मिणी है।

फरवरी 1928 में, आनंद विकटन एस.एस वासन के प्रशासन में छपने लगा। भारतियार के मित्र बरली.एस.नेल्लैयप्पर कल्कि को वासन के पास ले गए और उनका

परिचय कराया। वासन ने कल्कि को एक लेख लिखने के लिए कहा। कल्कि ने **'एट्टिक्कू पोट्टी'** शीर्षक से एक हास्य निबंध लिखा और भेजा। कल्कि नाम पर लिखा गया उनका यह पहला लेख है। उन्होंने **विकटन** में हास्य निबंध लिखना जारी रखा। इस समय, तिरुच्चेंगोडु में **"गांधी आश्रम"** चलाने वाले राजा ने कहा कि वे नशाबंधी अभियान के लिए **"विमोचनम"** नामक एक समाचार पत्र निकालने जा रहे हैं और इसमें उनका सहयोग अपेक्षित है। इससे प्रभावित होकर कल्कि ने तिरु.वी.क. से विदाई ली और तिरुच्चेंगोडु गए और विमोचनम के सह संपादक के रूप में कार्यभार संभाला।

1930 में, महात्मा गांधी ने नमक सत्याग्रह शुरू किया। इसमें भाग लेने हेतु राजाजी **वेदारण्यम** गए। राजाजी के मार्गदर्शन में **गोबिचेट्टीपलायम** में इस संग्राम में इन्होंने भाग लिया और प्रतिबंध का उल्लंघन करने के लिए इन्हे गिरफ्तार कर लिया गया। उन्हें 6 महीने जेल की सजा सुनाई गई थी। सजा काटकर बाहर आने पर कल्कि आनंद विकटन के सह संपादक बने। कल्कि के लेखन कौशल और वासन के प्रबंधन कौशल के साथ **विकटन** की बिक्री हजारों की संख्या में बढ़ गई।

**विकटन** में "कल्कि" द्वारा लिखी गई पहली धारावाहिक कहानी "कळ्वनिन कादली" ने पूरे तमिलनाडु में कल्कि की प्रसिद्धि फैला दी। बाद में के. सुब्रमण्यम ने कल्कि द्वारा लिखित कहानी "त्यागभूमि" पर आधारित एक फिल्म बनाई और श्रृंखला "त्यागभूमि" को फिल्म के चित्र के साथ विकटन में प्रकाशित किया गया। इस समय कल्कि के जीवन और **विकटन** के इतिहास में एक अप्रत्याशित मोड़ आया। ।

गांधी ने 1940 के दशक में भारत छोड़ो आंदोलन शुरू किया था। कल्कि ने महात्मा गांधी को एक पत्र लिखकर इस संग्रह में भाग लेने की अनुमति मांगी। जब कल्कि ने यह बात वासन को बताई तो उन्होंने कहा, "जब आपने गांधीजी को अपना नाम दिया था तो आपको मुझे भी बताना चाहिए था।" यही वह दौर था जब सरकार ने संघर्ष में शामिल अखबारों के खिलाफ कार्रवाई की थी। इसलिए वासन ने कहा कि कल्कि या तो संघर्ष से हट जाएं या इस्तीफा देकर संघर्ष में शामिल हो जाएं। परिणामस्वरूप उन्होंने इस्तीफा दे दिया और संघर्ष में भाग लिया। 3 माह के कठोर कारावास की सजा सुनाई गई।

जेल से रिहा होने के बाद कल्कि ने अपने दोस्त डी. **सदाशिवम** के साथ अपनी खुद की पत्रिका चलाने का निर्णय लिया। कांग्रेस के संघर्षों में कल्कि और सदाशिवम एक साथ भाग लेते थे और इसलिए घनिष्ठ दोस्त बन गए थे। **राजाजी** और रसिकमणि **टीकेसी** चिंतित थे कि कल्कि को अपनी पत्रिका चलाने में कठिनाइयों का सामना करना पड़ सकता है। लेकिन पत्रिका सफल रही। कल्कि के लेखन कौशल और डी. सदाशिवम के प्रबंधन कौशल से जल्दी ही "**कल्कि**" (नई पत्रिका का नाम) की बिक्री बढ़ गई।

तमिल में पहला ऐतिहासिक उपन्यास **"पार्थिबन कनवु"** कल्कि में एक श्रृंखला के रूप में प्रकाशित हुआ था। इसके बाद **"शिवगामियिन शपथम"** आई जिसने कल्कि को अद्वितीय प्रसिद्धि दिलाई। बाद में आया था **"पोन्नियिन सेल्वन"** जिसने पाठकों का मन लुभा लिया और हाल ही में फिल्म के रूप में भी इसने प्रसिद्धि पाई। स्वतंत्रता संग्राम पर आधारित कल्कि का **"अलै ओसै"** उनके सामाजिक उपन्यासों में प्रसिद्ध हुआ। कल्कि के अनुसार, यह उनके काम की उत्कृष्ट कृति है।

उन्होंने 35 लघु कहानी खंड, उपन्यास, निबंध, यात्रा वृत्तांत और आत्मकथाएँ लिखी हैं। उन्हें बेहतरीन सामाजिक और ऐतिहासिक उपन्यास लिखने के लिए व्यापक रूप से जाना जाता है। उन्होंने अपने कार्यों के माध्यम से भारतीय आजादी संग्राम में भी योगदान दिया है। इनकी  सरल और व्यंग्यात्मक शैली सभी को पसंद थी। इससे इनके कई परवर्ती लेखक भी प्रभावित हुए और इसी शैली को अपनाने लगे। इनमें देवन, तुमिलन आदि का नाम उल्लेखनीय है और कल्कि का मानना है कि वे वडुवूर दुरैसामी अय्यंगार तथा सर वॉल्टर स्कॉट, अलेक्जेंडर डूमास आदि की शैलियों से प्रेरणा प्राप्त करते थे।

**उनकी कृतियां - उपन्यास और अन्य**

पार्थिबन कनवु (1941 - 1943)

शिवगामियिन शपथं (1944 - 1946)

पोन्नियिन सेलवन (1951 - 1954)

**अन्य**

ओट्रै रोजा, तीप्पिडित्त गुडिसैगळ, पुदु ओवरसीयर, वस्थादु वेणु, अमरवाळ्वु, सुण्डुविन सन्यासम, तिरुडन मगन तिरुडन, पोंगुमांगडल, मास्टर मेदुवडै, पुष्प पल्लक्कु, परिसल तुरै, सुशीला एम. ए, एस एस मेनका, सारदैयिन तंतिरम, पुन्नै वनत्तुप्पुलि, तिरुवळुन्दूर शिवकोळुन्दु, मयिलैक्कालै, मयिलविळि मान, कणैयाळियिन कनवु, भवानी, बी. ए, बी. एल, कैलासमैयर काबरा, बाल जोसियर, माडत्तेवन सुनै, देवयानी, अरसूर पंचायत्तु

**उपन्यास**

**कळ्वनिन कादली (1937), त्यागभूमि (1938-1939), मगुडपति (1942), अबलैयिन कन्नीर (1947), सोलैमलै इलवरसि (1947), अलै ओसै (1948), देवकियिन कणवन (1950), मोगिनितीवु (1950), पोय्मान करडु (1951), पुन्नैवनत्तु पुली (1952), अमरधारा (1954).**

**पुरस्कार साहित्य अकादमी पुरस्कार, 1956 -अलै ओसै के लिए संगीत कलासिकामणि पुरस्कार**

*****

